

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நேற்று முன்தினம் (20.07.2023) சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 7வது ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஸ்ஷிப்2023, ”கோப்பை யினை (Trophy) அறிமுகம் செய்தார். இந்த நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, ஹாக்கி இந்தியா தலைவர் பத்ம ஸ்ரீ டாக்டர் திலிப்டர்க்கி, செயலாளர் போலோநாத்சிங், பொருளாளர் சேகர்மனோகரன், மற்றும் ஒலிம்பியன் பாஸ்கரன், கோவிந்தா, முகமது ரியாஸ் ஆகியோர் உடன் உள்ளனர்.

### நெல்லை மாவட்டம் - ராதாபுரம் உள்ளிட்ட 7 ஊராட்சி ஒன்றியங்களில்

# ரூபாய் 605.75 கோடி மதிப்பில் கூட்டுக் குடிநீர்த் திட்டப்பணிகள்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்து பேச்சு!

நெல்லை, ஜூலை 22 -

நெல்லை மாவட்டம் வடக்கன்குளம் ஊராட்சியில் இராதாபுரம்,வள்ளியூர், நாங்குநேரி, களக்காடு, பாளையங்கோட்டை மற்றும் சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 831 ஊரக குடியிருப்புகளுக்கு ரூபாய் 605.75 கோடி மதிப்பீட்டிலான கூட்டு குடிநீர்திட்ட பணிகள் அடிக்கல் நாட்டு விழா நிகழ்வு மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மாவட்ட ஊராட்சி மன்ற குழு தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று பணிகளை துவக்கி வைத்தார்.

இதில் மு.அப்பாவு அவர்கள் பேசியதாவது:-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 2006 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோது துணை முதல்வராகவும் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் இருந்த இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வடக்கன்குளத்திற்கும்,

காவல்கிணறுக்கும் கொடுமுடி ஆற்றில் இருந்து தண்ணீரை கொண்டுவதற்காக அன்றைய காலகட்டத்தில் ரூபாய் 125 லட்சம் நிதியை ஒதுக்கி திட்ட பணிகள் நடைமுறைப்படுத்தப் பட்டது.கடந்த காலங்களில் சரியான முறையில் நடைமுறைப்படுத்தாத காரணத்தினால் இந்த திட்டம் சிறப்பு அடையவில்லை.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அமைப்பு முத்தமிழ் கலைஞர் அவர்கள் ஆட்சி காலத்தில் தான் கொண்டு வரப்பட்டது. இது தொடர்பாக கூட்டு குடிநீர் திட்டப்பணிகள் குறித்து முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றதன் அடிப்படையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நெல்லை மாவட்டத்தில் கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகளுக்கு உடனடியாக மேற்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளார்கள். அதன் அடிப்படையில் இராதாபுரம், வள்ளியூர், நாங்குநேரி, களக்காடு, பாளையங்கோட்டை மற்றும் சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 831 ஊரக குடியிருப்புகளுக்கு ரூபாய் 605.75 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர் திட்ட பணிகளை எனது தலைமையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்எஸ். ராஜகண்ணப்பன், பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் ஆகியோர் 26.05. 2023 அன்று அடிக்கல் நாட்டினார்கள்.

இத்திட்டத்திற்கு நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை ஒன்றியம் மேல முன்னீர்பள்ளம் அருகில் தாமிரபரணி ஆற்றில் ஒரு நீர் சேகரிப்பு கிணறு அமைக்கப்பட உள்ளது.நீர் சேகரிப்பு கிணறு மூலம் பெறப்படும் நீர் புதிதாக சிங்கிகுளம் கிராமத்தில் அமைக்கப்பட உள்ள 22.79 லட்சம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மூலம் சுத்திகரிக்கப்பட்டு பிரண்டைமலையில் உள்ள 9.50 லட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள முதலாவது தலைமை மேல் நிலை நீர்த்தக்க தொட்டிக்கு நீரேற்றம் செய்யப்பட உள்ளது.பின்னர் அங்கிருந்து 6.50 லட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள தெற்கு வள்ளியூர் தலைமை மேல் நிலை நீர் தேக்க தொட்டிக்கும்,இராதாபுரம் தலைமை மேல்நிலை நீர்த் தேக்க தொட்டிக்கும் 303.88 கிலோமீட்டர் நீளமுள்ள குழாய்கள் வழியாக நீரேற்றம் செய்யப்பட உள்ளது.

மேற்கண்ட 3 தலைமை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் இருந்து 54 தரைமட்ட நீர்த் தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் கொண்டு செல்லப்படுகிறது. பின்னர் 569.50 கிலோ மீட்டர் கிளை நீர் உந்து குழாய்கள் மூலம் பயன்பாட்டில் உள்ள 1176 மேல் நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் புதிதாக கட்டப்பட்டு உள்ள 162 மேல்நிலை நீர்த்தேக்கம் தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றப்பட உள்ளது.மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளில் இருந்து ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள மற்றும் புதிதாக அமைக்கப்பட உள்ள பயிர்மான குழாய்கள் மூலம் பயனாளிகளுக்கு குடிநீர் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 65,434 வீட்டு இணைப்புகள் வழங்கப்பட உள்ளது.

மேலும் இப்பணிகளை விரைந்து முடிப்பதற்கு டெண்டர் விடப்பட்டு இன்று முதல் பணிகள் ஆரம்பிக்கப்படுகிறது.15 மாதங்களில் பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விரைந்து வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஆன அரசு சாதி, மதம்,வேறுபாடு இன்றி அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைந்து செயல்படும் அரசாக திகழ்கிறது.

மகளிர் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொள்வதற்கான பயணக் கட்டணத்தை முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசு நிதியிலிருந்து செலுத்திக் கொண்டிருக்கிறார் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் முதலமைச்சர்அவர்கள் ரூபாய் 1028 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.இது மிகப்பெரிய சாதனையாகும்.இன்று ஒன்றரை வருடங்களில் நெல்லை மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் தட்டுப்பாடு இன்றி கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. இது போன்ற அற்புதமான கூட்டு குடிநீர் திட்டத்தை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொது மக்கள் என்றென்றும் தங்களது முழு ஒத்துழைப்பை நல்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேசினார்.

இந்நிகழ்வில் நிர்வாகப் பொறியாளர் ராமலட்சுமி உதவி நிர்வாக பொறியாளர் கள் டேனிஸ், மயில்வாகனம் ராமசாமி பங்குத்தந்தை மாட்டின், இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி, வடக்கன்குளம் ஊராட்சி மன்ற தலைவர் ஜான்கென்னடி,வள்ளியூர் ஒன்றிய குழு துணை தலைவர் வெங்கடேஷ் தன்ராஜ்,மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் பாஸ்கர்,ஜான்சு ரூபா,

உள்பட அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### ‘இனி பாதுகாப்பாக வாழ முடியுமா?’ என்ற அச்ச உணர்வை பெண்கள் மனதில் மணிப்பூர் கொடூரங்கள் விதைத்திருக்கின்றன!

# தேசிய மகளிர் ஆணையம் - உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுத்திடுவீர்!

## சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ.கீதாஜீவன் அறிக்கை!

**சென்னை, ஜூலை 22 -**

**“அத்தனைப் பெண்களின் நெஞ்சிலும், ‘இனி பாதுகாப்பாக வாழ முடியுமா?’ என்ற அச்ச உணர்வை விதைத்திருக்கின்றன, மணிப்பூர் கொடூர நிகழ்வுகள்” என்றும் தேசிய மகளிர் ஆணையம் என்ன செய்கிறது? ‘பெண்கள் பாதுகாப்பு’ என்று கிளிசரின் கண்ணீர் வடித்தவர் எங்கே?” என்றும் சமூக நலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன் அறிக்கை விடுத்துள்ளார்.**



அவரது அறிக்கை வருமாறு:-

இதயம் உள்ள எவராக இருந்தாலும் மணிப்பூர் பெண்களுக்கு நிகழ்ந்த கொடூரத்தை வெளிப்படுத்திய வீடியோ காட்சிகளைத் தொடர்ந்து பார்க்க முடியாது. அந்தளவுக்கு நெஞ்சத்தை உலுக்கி எடுக்கிறது. ஒரு பெண்ணாக, இந்தக் காட்டுமிராண்டித் தனமான செயலைக் கண்டு பதறுகிறேன். வன்மையாகக் கண்டிக்கிறேன்.

மணிப்பூரில் வாழும் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தி, மதவெறியைத் தூண்டி, மாநிலத்தை கலவரக் காடாக்கி, ரத்த ஆறு ஓடும்படி செய்திருக்கின்றன மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. அரசும், ஒன்றிய பா.ஜ.க அரசும்!

மூன்று மாதங்களாக மணிப்பூரில் கலவரம் பற்றி எரியும் நிலையில், நாட்டின் பிரதமர் அந்தப் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. உண்மை நிலவரம், எத்தனை கொடூரமாக இருக்கிறது என்பதைத் தொடர்ந்து வெளியாகும் வீடியோ காட்சிகள் வெளிப்படுத்தி வரும் நிலையில், குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள் என்று நாடாளுமன்றக் கூட்டத் தொடர் தொடங்கும் நாளில் செய்தியாளர்களிடம் பிரதமர் தெரிவித்திருக்கிறார்.

*Better late than never* என்பது போல இனியாவது உண்மைக் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இதுகுறித்து பேசுவதற்கும் விவாதிப் பதற்கும் அனுமதி மறுக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இந்நிலையில், பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஒருவரின் தலை துண்டிக்கப் பட்டு, நட்டு வைக்கப்பட்டிருக்கும் கொடூரமும் வெளிப்பட்டுள்ளது.

இத்தகைய கொடூரங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து, மணிப்பூர் மாநில பா.ஜ.க. முதலமைச்சரிடம் செய்தியாளர்கள் கேட்ட போது, இது போல பல நிகழ்வுகள் நடந்துள்ளன. எத்தனை வழக்குகள் பதிவு செய்வது என்று மனிதாபிமானமற்ற முறையில் அலட்சியத்துடன் பதிலளித்திருக்கிறார். பெண்களுக்கு முற்றிலும் பாதுகாப்பு இல்லாத சூழல் மணிப்பூரில் நிலவுகிறது. இதுபோன்ற கொடூர நிகழ்வுகளில் பெண்களின் நம்பிக்கையும் பாதுகாப்பும், தேசிய மகளிர் ஆணையம் தான்.

மேடைகளில் பேசுபவர்கள், ஊடகங்களில் விவாதிப்பவர்கள், சமூக வலைதளங்களில் பதிவிடுவோர் உள்ளிட்டோர் பொதுவான முறையில் பெண்களைக் குறித்துப் பேசினாலும், தனிப்பட்ட முறையில் விமர்சித்தாலும் உடனடியாக, தானாக முன்வந்து அதனைவிசாரிக்கிறது தேசிய மகளிர் ஆணையம். இதுவும் அதன் கடமை தான்.

பேசுவதற்கே இத்தனை கடமையுணர்ச்சியுடனான செயல்பாடு என்றால், மணிப்பூரில் மாதக்கணக்கில் பெண்கள் மீது நடத்தப்படும் கொடூரப் பாலியல் தாக்குதல் மீதான நடவடிக்கை என்ன? இத்தனை நாளாக கண்டும் காணாததுமாக இருந்தது ஏன்?

தேசிய மகளிர் ஆணைய உறுப்பினர் என்ற பொறுப்பில் இருந்துகொண்டு, பெண்கள் பாதுகாப்பு என்று கிளிசரின் கண்ணீர் வடித்தவர் எங்கே போனார்? பா.ஜ.க.விலும் மகளிர் பிரிவு இருக்கிறது. அதன் தேசிய அளவிலான தலைவராக இருக்கக்கூடியவர் என்ன செய்து கொண்டிருந்தார்?

நாட்டில் வாழும் அத்தனைப் பெண்களின் நெஞ்சிலும், தங்களால் இனி பாதுகாப்பாக வாழ முடியுமா என்ற அச்ச உணர்வை விதைத்திருக்கின்றன மணிப்பூர் கொடூர நிகழ்வுகள். ஒட்டுமொத்த இந்தியப் பெண்களின் நலனைக் கருதியும், மணிப்பூர் மாநிலப் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலும் தேசிய மகளிர் ஆணையம் தன் கண்களைத் திறந்து பார்த்து, கடமையை விரைந்து மேற்கொண்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அமைச்சர் கீதாஜீவன், தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### 21.7.2023 - நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நினைவு நாள்!

# சிந்தையில் நின் சிலையன்றோ?



அண்ணாவின் நாடகத்தில்
அரங்கேறி மராட்டிய
மண்ணாளும் சிவாஜி
மாமன்னன் வேடமேற்றுக்
கண்களோ விரிந்திடக்
காதுகள் இனித்திடப்
பண்டு நீ நடித்ததனைப்
பார்த்த ஒரு பெரியார்தான்
தொண்டுசெய்து பழுத்தவர்
துலாக்கோலாய்ப்
பகர்பவர்
செண்டளித்துப்
பாராட்டி,
சிவாஜியே நீயென்று
விண்டனர்; அன்றுமுதல்
விளங்குகிறாய் சிவாஜியாய்!
எண்டிசையும் புகழ்மணக்க
இப்பெயரே இயற்பெயராய்க்
கொண்டாடி மகிழ்கின்றார்;
குலப்பேராய் மதிக்கின்றார்!

கலைஞரின் பராசக்தி
கனல்தெறிக்கும் உரையாடல்
இலையிங்கே பேசுதற்கு
இன்னொருவர் உனைப்போல!

சிலையாக நிற்பதே
சிறந்ததொரு நடிப்பென்று
கொலைவாளை வீசலே
கொண்டாடத் தக்கதென்று
விலையாகிக் கிடந்தவர்கள்
வெலவெலத்துப் போகவே
நிலையின்றி உயர்ந்தவர்கள்
நெஞ்சந்தான் கலங்கவே
தலைசிறந்த நடிகரெனத்
தமிழ்த்திரை வியந்திட
மலையுயரம்
சென்றுவிட்டாய்;
வானுயரம் தொட்டுவிட்டாய்;
கலையுலகில் நின்றுவிட்டாய்;
காலத்தை வென்றுவிட்டாய்!
அலையாக எழுகின்ற
ஆயிரம் உணர்ச்சிகள்
கலையாக நடிப்பிலே
காட்டிய உன் திறங்கண்டு
மலையாதார் யாரிங்கே!
மகிழாதார் யாரிங்கே!

அண்ணாவின் தம்பியாய்
அருங்கலைஞர் நண்பனாய்த்
திண்பெரியார்
தொண்டனாய்த்
திராவிடச் செல்வனாய்த்
தண்டமிழ் நாடெங்கும்
தாவிவரும் காவிரியாய்
வண்டமிழ் நீ பொழிய
வாய்திறந்து கேட்டவர்கள்
உண்டனர் செந்தமிழ்த் தேன்;
ஓங்கினர் உரிமைப்போர்!
கண்டவர்கள் உடனிருந்த
கயவர்கள் பகைநெஞ்சம்
கொண்டவர்கள்
விரித்தவலைக்
கூண்டிலே விழுந்துவிட்டாய்!
ஒண்டவந்த பிடாரிதான்
ஊர்த்தெய்வம் விரட்டினாற்போல்
தண்டூன்றி நின்ற உன்னைத்
தள்ளியன்றோ விட்டார்கள்!

இயக்கத்தின் வளர்ச்சிக்கோ
எத்தனையோ நாடகங்கள்
தயக்கமே இல்லாமல்
சம்பளமும் கேட்காமல்
வியக்கத்தான் பற்பல
வேடங்கள் ஏற்றன்று
வியர்வையைப் பொழிந்தவனே!
வெண்கலமாய் ஒலித்தவனே!
பயமின்றித் தன்மானம்
பகுத்தறிவு மொழிந்தவனே!
சுயமாக எழுந்தவனே;
சுடராக ஒளிர்ந்தவனே!
வயமாக மக்களை
வண்டமிழ் முழக்கத்தால்
இயல்பாக வளைத்தவனே!
எழுச்சியை வளர்த்தவனே!

புயலான உன்வளர்ச்சி
பொறுக்காத வஞ்சகர்கள்
அயராமல் கழகம்விட்டு
அப்புறப் படுத்திவிட்டார்!
மயலாகிக் குழம்பியே
மனமுடைந்து மாபெருந்
துயரந்தான் பட்ட நீ
சூழ்ச்சிதான் விளங்காமல்
அயலாரைச் சேர்ந்துவிட்டாய்;
அரசியலில் தீர்ந்துவிட்டாய்!
முயலாக முயன்றும்நீ
முடிவிலே சோர்ந்துவிட்டாய்!
வயலான உனைஅவர்கள்
வன்பாலை ஆக்கிவிட்டார்!
வயக்களிறு தடுமாறி
வன்குழியில் வீழ்ந்தது;
கயத்தாற்றுக் கட்டபொம்மன்
கதியேதான் நேர்ந்தது;
கயலொன்று தரைவந்த
கதையாகிப் போனது!

தரைதட்டும் கப்பலிலே
தாவிநீ ஏறிவிட்டாய்;
வரையளவு முயன்றும்உன்
வலிமையை இழந்திட்டாய்!
இரையாகும் வெள்ளாடாய்
இறுதியிலும் நீ பட்டாய்!
நுரையென்று தள்ளுவோம்;
நோன்பாக நீகொண்ட
திரையுலகச் சாதனைகள்
சிகரத்தின் சிகரமன்றோ!

செருவிலே மாவீரன்
சிவாஜிதான் வென்றதுபோல்
திரையிலே நீஒரு
சிவாஜியாய் வென்றுயர்ந்தாய்!

உனைப்போல நடிப்பதற்கோர்
உலகினிலே இன்னொருவர்
நினைத்தாலும் முடியுமா?
நிழலெங்கும் படியுமா?
முனைந்தாலும் இயலுமா!
முளைத்தாலும் வளருமா?
வனைந்தாலும் நில்லாதே;
வடித்தாலும் செல்லாதே;
புனைந்தாலும் வெல்லாதே;
புகன்றாலும் கல்லாதே!

நிழல்கூட நடிக்கின்ற
நீர்மையைப் பெற்றவனே!
குழலினிமை யாழினிமை
குரலினிமை கூற்றினிமை
முழவெழுந்தாற் போலவே
மூரியெழும் சிங்கத்தின்
முழக்கந்தான் உன்குரல்;
மூண்டெழும் வன்குழல்!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

முந்நூறு படங்களிலே
முடிசூடி நாயகனாய்
ஐந்நூறு நடைநடந்தாய்;
அருநடிப்பின் மடைதிறந்தாய்;
தன்னுருவம் ஒன்றெனினும்
தாங்கியபல் வேடத்தால்
பன்னூறு தோற்றங்கள்
பளிச்செனக் காட்டினாய்;
நன்னூறு மாற்றங்கள்
நடிப்பாலே கூட்டினாய்;
முன்னேறி முன்னேறி
முழுமையை நாட்டினாய்;
பின்ஏராய் வருவோர்க்கும்
பெரும்பாடம் ஊட்டினாய்!

மின்னேறும் வானைப்போல்
மிசையேறும் கதிரைப்போல்
பொன்னேறும் மதியைப்போல்
பொழிலேறும் காற்றைப்போல்
நன்னீரும் நிலமும்போல்
நடிப்புத்தீச் சுடரைப்போல்
தன்னேர்ஒன் றில்லாத
தலைவனாய்த்
தமிழ்த்திரையில்
ஒன்றானாய்; நூறானாய்;
ஒருகோடி என்றானாய்;
நன்றானாய்; உயிர்த்தோடும்
நறும்புனல் ஆறானாய்!

எந்த ஒரு படத்தைத்தான்
ஈடற்றது என்றுரைக்க?
அந்திநிலா வெளிச்சத்தை
அளந்துரைப்பார் யாரிங்கே?
சந்தனக் குழம்பிலே
சரியான துளிஎது?
தந்தத்தில் எப்பக்கம்
தழைத்திடும் வெண்ணிறம்?
செந்தூரப் பூச்சிலே
சிவக்காத இடம்எது?
வெந்தழலில் சூடில்லா
வெற்றிடம் தான்எது?
இந்தநிலை தான் என்றும்!
ஏழ்நிறத்தில் எந்தநிறம்
சிந்தையைக் கவருமென்று
செப்பத்தான் இயலுமா?
சிந்தலை கடலிலே
சிறுதுளியும் நீர்தானே;
வந்தபடம் ஒவ்வொன்றும்
வானெட்டும் சீர்தானே!

தூர்ந்துவிட்ட குளமென்றும்
தூர்வாரா ஏரியென்றும்
பேர்ந்துவிழும் கோட்டையென்றும்
பிளந்துவிட்ட கப்பலென்றும்
தேர்ந்திடாமல் தெளிந்திடாமல்
திடுமெனச் சென்றுநீ
சேர்ந்த இடம் உன்பெருஞ்
சிறப்புணராத் தேய்ந்த இடம்;
தீர்ந்த இடம் அதுவென்று
சிறிதும்நீ அறியவில்லை!

ஓர்ந்துணராது அரசியலில்
ஒதுக்குண்டாய்; ஆனாலும்
ஆர்ந்தெழுந்தாய்
திரையிலே;
ஆகாயம் வரையிலே!
சீர்ந்துயர்ந்தாய்;
நீஅமர்ந்த
சிம்மாசனம் இன்றுவரை
ஊர்ந்தமர ஒருவரின்றி
உள்ளதுதான் உண்மையன்றோ!

கலைஞர்தான் கடற்கரையில்
கலைவேந்தாய் நீ நிற்கும்
சிலையன்று நிறுவினார்;
சிங்கத்தமிழன் இந்தக்
கலைக்குரிசில் சிவாஜி
கணேசன்என் நண்பனென
நிலைகொள்ளாக் களிப்பிலே
நெஞ்சந்தான் பூரித்தார்!
மலைவேந்தன் குட்டுவனின்
மான உரை முழுவதும்
கலையாகப் பேசியே
காட்டினார் அன்றுன்னை!
உலகெலாம் கண்டுவந்த
உன்னழகுத் திருவுருவச்
சிலையினை அகற்றியே
சிறுமையினைச் செய்தவர்
நிலையென்ன ஆயிற்று?
நீள்இழிவாய்ப் போயிற்று!
புலைச்செயல் ஒருநாளில்
புதைகுழியே ஏகிற்று!
தலைமகன் தளபதிதான்
தாமாக விரும்பியே
கலைமகன் சிலையினைக்
கண்காண நிறுவினார்!
தலைமுறைகள் அவர்புகழ்
சாற்றிடும்; போற்றிடும்!

அடுத்தவர் அறியாமல்
அள்ளிஅள்ளிப் பலகோடி
கொடுத்தவன்நீ; உலகந்தான்
கொஞ்சமும் அறியவில்லை!
எடுத்துரையா திருந்துவிட்டாய்;
எவருரைக்க முயன்றாலும்
தடுத்துவிட்டாய்; வள்ளலெனத்
தம்பட்டம் அடிப்பதனை
விடுத்துவிட்டாய்! ஒருபோதும்
விளம்பரக் கொடைஞரெனத்
தொடுத்துரைக்க விரும்பாமல்
தூய்மையாய்த்
துலங்கிவிட்டாய்!

கண்களால் ஆயிரம்
கலைகளைக் காட்டினாய்;
எண்ணாத உணர்ச்சிகள்
ஏராளம் தீட்டினாய்;
பண்ணாத வேடமில்லை;
பலவண்ணம் காட்டினாய்;
அண்ணாந்து நோக்கினும்
அகப்படாது இருந்துபிறர்
நண்ணாத உயரத்தை
நடிப்பிலே எட்டினாய்!

மண்ணாளும் அரசினும்
மறையாத நிலையன்றோ!
விண்ணாளும் நடிப்பாலே
விளைந்த உன் புகழன்றோ!
எந்நாளும் அழியாத
எழிலான கலையன்றோ!
இந்நாளும் பின்நாளும்
இலகிடும் மலையன்றோ!
அந்நாளும் உயர்ந்திருக்கும்
அரங்கம்உன் தலையன்றோ!
சென்றாலும் நின்றாலும்
சிந்தையில் உன் சிலையன்றோ!

நடிகருள் திலகமே;
நடிப்பிற்கோர் உலகமே!
அடிமுதல் முடிவரை
அருநடிப்பு இலகுமே!
படிமிசை நாளெலாம்
பார்க்கின்றோம் நின்னெழில்
வடிவந்தான்! வளர்நினைவில்
வாழ்கநீ வாழ்கவே!